# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஆறாம் பத்து

## ஒன்பதாம் திருவாய்மொழி - நீராய்
## கேட்டவர்கள் நெஞ்சு நீராய்க் கரையவும், திருமாலுக்கும் பரமபதத்தில் இருப்பு அரிதாகவும், ஆழ்வார் ஆராத காதலுடன் கூப்பிடுதல்

** நீராய் நிலனாய்த் * தீயாய்க் காலாய் நெடுவானாய் *
சீரார் சுடர்கள் இரண்டாய்ச் * சிவனாய் அயனானாய்! **
கூரார் ஆழி வெண்சங்கு ஏந்திக் * கொடியேன் பால்
வாராய் * ஒரு நாள் * மண்ணும் விண்ணும் மகிழவே 1

மண்ணும் விண்ணும் மகிழக் * குறளாய் வலங்காட்டி *
மண்ணும் விண்ணும் கொண்ட * மாய அம்மானே! **
நண்ணி உனை நான் * கண்டு உகந்து கூத்தாட *
நண்ணி ஒரு நாள் * ஞாலத்தூடே நடவாயே 2

ஞாலத்தூடே நடந்தும் நின்றும் * கிடந்து இருந்தும் *
சாலப் பல நாள் * உகம் தோறு உயிர்கள் காப்பானே! **
கோலத் திரு மா மகளோடு * உன்னைக் கூடாதே *
சாலப் பல நாள் * அடியேன் இன்னம் தளர்வேனோ? 3

தளர்ந்தும் முறிந்தும் * சகட அசுரர் உடல் வேறா *
பிளந்து வீயத் * திருக் கால் ஆண்ட பெருமானே! **
கிளர்ந்து பிரமன் சிவன் * இந்திரன் விண்ணவர் சூழ *
விளங்க ஒரு நாள் * காண வாராய் விண் மீதே 4

விண் மீது இருப்பாய்! மலை மேல் நிற்பாய்! * கடல் சேர்ப்பாய்! *
மண் மீது உழல்வாய்! * இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்! **
எண்மீது இயன்ற புற அண்டத்தாய்! * எனது ஆவி *
உள் மீதாடி * உருக் காட்டாதே ஒளிப்பாயோ? 5

பாய் ஓர் அடி வைத்து அதன் கீழ்ப் * பரவை நிலம் எல்லாம்
தாய் * ஓர் அடியால் * எல்லா உலகும் தடவந்த
மாயோன்! ** உன்னைக் காண்பான் * வருந்தி எனை நாளும் *
தீயோடு உடன் சேர் மெழுகாய் * உலகில் திரிவேனோ? 6

உலகில் திரியும் கரும கதியாய் * உலகமாய் *
உலகுக்கே ஓர் உயிரும் ஆனாய்! * புற அண்டத்து **
அலகில் பொலிந்த * திசை பத்தாய அருவேயோ! *
அலகில் பொலிந்த * அறிவு இலேனுக்கு அருளாயே 7

அறிவு இலேனுக்கு அருளாய் * அறிவார் உயிர் ஆனாய்! *
வெறி கொள் சோதி மூர்த்தி! * அடியேன் நெடுமாலே! **
கிறி செய்து என்னைப் புறத்திட்டு * இன்னம் கெடுப்பாயோ? *
பிறிது ஒன்று அறியா அடியேன் * ஆவி திகைக்கவே 8

ஆவி திகைக்க * ஐவர் குமைக்கும் சிற்றின்பம் *
பாவியேனைப் * பல நீ காட்டிப் படுப்பாயோ? **
தாவி வையம் கொண்ட * தடந்தாமரைகட்கே *
கூவிக் கொள்ளும் காலம் * இன்னம் குறுகாதோ? 9

குறுகா நீளா * இறுதி கூடா எனை ஊழி *
சிறுகா பெருகா * அளவில் இன்பம் சேர்ந்தாலும் **
மறுகால் இன்றி மாயோன் * உனக்கே ஆளாகும் *
சிறு காலத்தை உறுமோ? * அந்தோ! தெரியிலே 10

** தெரிதல் நினைதல் * எண்ணல் ஆகாத் திருமாலுக்கு *
உரிய தொண்டர் தொண்டர் * தொண்டன் சடகோபன் **
தெரியச் சொன்ன * ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் *
உரிய தொண்டர் ஆக்கும் * உலகம் உண்டாற்கே 11

**அடிவரவு:** நீர் மண் ஞாலம் தளர்ந்து விண் பாய் உலகு அறிவு ஆவி குறுகா தெரிதல் உலகம்

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**